பதிவு எண் – M. 720.   வெள்ளிக்கிழமையில்   திருகுலித்தாள்

முல்லைக்கொடி

கிழமை வெளியீடு :- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

5–கிளை   திருநிலயம், மாம்பாக்கம்; விசய, ஆனி;   10–7–53   தளிர்–41

குகுருலத்தின் குறிக்கோள் :

பொதுமறை விளக்கம்—திருவள்ளுவர் தெரிவிப்பது

செல்வரில் அறிஞர்

செல்வத்தைத் தேடுவதற்கு எவ்வளவு அறிவு நலம் வேண்டுமோ, அதை விட மிகுதயாக வேண்டும், அதனை வகையாகச் செலவு செய்வதற்கு! செல்வமோ, நிலையில்லாத இயல்புடையது; நிலைத்த நன்மைக்கு அதனைச் செலவு செய்தால், அச் செல்வத்தால் பயன் கண்டபடி ஆகும். அப்படிச் செலவு செய்யா விட்டால், பயனை இழப்பதோடு பொருளையும் இழந்து நிற்பது உறுதி! எவ்வளவு வருந்திக் காத்தாலும் பொருள் நில்லாது.

விருந்தோம்பும் வழியிற் பொருள் செலவு செய்யப்பட்டால், அது நாட்டின் ஆக்கத்துக்கு நேர் வழியிற் பயனாய் உதவுகின்றது. கடமைகளின்மேல் வெளிவரும் மனிதர்கள், நாட்டுக்கு மிகவும் ஆக்கமானவர்கள்! வாழ்நாள் பயன்பட ஒழுகுபவர்கள்! அயலூர்களுக்கு அவர்கள் புதியவராயிருந்தாலும், அத்தகையோரே நல்ல நட்புக்கு ஏற்றவர்கள்! அவர்கள் தொடர்பு, அனைவரும் கடமைக் கருத்திலும் செயலிலும் ஒழுக ஏதுவாகும். அதனால், நாடு எல்லா வகையிலும் முன்னேறும்.

உறவு பெருக, விருந்தோம்புதலை விட வகையான வழி வேறில்லை நட்புணர்வு, வேளாண்உணர்வு, நன்றியுணர்வு முதலிய பெரும் பண்புகளும் அவற்றால் உண்டாகும் ஆக்க முதலியவைகளும் பெற அது மிகுதியும் உதவியாகும். மன்பதைத் தொண்டு என்னும் மனித வேள்விக்கு, ஒப்புரவு வாழ்வுக்கு, விருந்தோம்பு தலே முதற்படியாகும்.

பொருளை இவ்வகையிற் செலவு செய்து பயன் கண்டால் பொருள் இருந்தாலும் மறைந்தாலும், அப் பொருளின் பயன் நின்று காக்கும். இன்றேல், பயன் என்னும் பற்றுக்கோடு உண்டாகாமல், பொருள் என்னும் பற்றுக்கோடும் அற்று மக்கள் அலமருவர்.

அறிவு நலமுடைய நன் மக்கள் இவ்வகையில் மிகவும் விழிப்பாயிருக்க வேண்டுமன்றோ!

பரிந்தோம்பிப் பற்றற்றேம்
என்பர், விருந்தோம்பி
வேள்வி தலைப்படா தார்.

விருந்து ஓம்பி– விருந்தினர்க்கு வேண்டுவன செய்து, வேள்வி தலைப்படாதார்— அவ் வேள்வியின் பயனைக் கூடும் அறிவுநலம் இல்லாதவரே, பரிந்து ஓம்பிப் பற்று அற்றேம் என்பர்— நிலையில்லாத செல்வத்தை வருந்திக் காத்துக் கடைசியில் இழந்து அப்பற்றுக் கோடும் அற்றுவிட்டோமே என்று இரங்குபவர் ஆவர்.

விருந்தோம்புவோர், செல்வத்தை உண்மையிற் காத்துக் கொண்டவராவர் என்றபடி.

பெரும் பொறுப்பெடுத்துச் செல்வத்தை வருந்திக் காக்க வேண்டுதலின், 'பரிந்தோம்பி' என்றார். பற்றுக்கோடு, பற்று எனப்பட்டது. வேள்வி என்றது இங்கே வேள்வியின் பயனைக் குறித்தலின் ஆகுபெயராய் நின்றது. தலைப்படும் அறிவிலாதாரைத் 'தலைப்படாதார்' என்றார்.

செல்வத்தை எவ்வளவுதான் வருந்திக் காத்தாலும் அது நிலையில்லாததாய் ஒழிதலின், அவ்வியல்புணர்ந்து தக்கபடி அதனைச் செலவு செய்து அதனாலான பயனைக் காண்டலே அறிவுடைமையாதலின், இங்ஙனங் கூறினார்.

"முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)
5-ம் ஆண்டுக் கையொப்பம்
(3-10-52 முதல்)

உள் நாடு	ரூ.	4	0	0
வெளி நாடு	ரூ.	6	0	0
தனித் தாள்		0	1	0
ஆயுள்— கையொப்பம்	ரூ.	100	0	0

விற்பனையாளர்கள், தேவைக்கு முன்பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா."
—புறநானூறு.

கிளை	விசய, ஆனி,	தளிர்
5	10-7-53 வெள்ளி	41

புதுக் கல்வி முறை

கல்வியே ஒருநாட்டின் உயிர்நாடி. அதைப்பொறுத்ததே மக்களின் ஒழுக்கமும் வாழ்வும். மக்கள் வாழ்க்கைக்குப் பயன்படும் உயர்ந்த கல்வியைப் பரப்பி ஒழுக்கத்தை மேம்படுத்துவது ஆட்சியின் கடமை.

உரிமைக்குப் பின் சென்னை ஆட்சியின் கீழ்க் கல்வி பல மாறுதல்களை அடைந்து வருகிறது. தொழிலுக்கு முதன்மை தர வேண்டுமென்பது தலைவர்களின் கருத்து. இந்நோக்கத்தோடு இவ்வாண்டு, தொடக்கப்பள்ளிகளில் ஒரு மாறுதல் கொண்டுவரப்பட்டது. அது, இதுவரை ஐந்துமணி நேரம் கற்று வந்த தொடக்கப்பள்ளி மாணவர்கள், இனி, மூன்று மணி நேரம் மட்டுமே பள்ளியில் இருக்க வேண்டுமென்பது. மற்ற நேரங்களில் அவரவர் பெற்றோர்க்கு அவர் தம் தொழில்களில் உதவுதலும், விடுதலையோடு விளையாடி உடலை வளர்த்தலும் எதிர்பார்க்கப் படுகிறது.

இப்புது முறைப்படி பொதுக் கல்விக்குக் கொடுக்கப்படும் நேர அளவு தொழிற் கல்விக்கும் தரப்பட வேண்டும் என்னும் நோக்கம் வரவேற்கத் தக்கது. கல்வியில் முதன்மை வாய்ந்த பகுதி தொழிற் கல்வி என்று கொள்ளினும் பொருந்தும். அவ்வாறு கொள்ளப் படாமையினாலேயே இன்று படித்த மாணவர்கள் உடனே ஒரு தொழிலை ஏற்று வளமான வாழ்க்கையை நடத்த இயலாமல் இருக்கின்றனர். இதன் விளைவாக நாட்டில் வறுமையும் துன்பமும் மிகுந்து வருகின்றன. வறுமைத்துன்பங்களைப் போக்க அரசியலார் மற்றத் துறைகளில் முயல்வதைப் போல கல்வித் துறையிலும் சீர்திருத்தங்கள் கொண்டு வருவது முறையே.

இத்திட்டம் வெற்றி பெற வேண்டுமானால் இதில் சில திருத்தங்கள் செய்யப்பட வேண்டும். மூன்று மணி நேரப் பள்ளிப் படிப்புக்குப் பின் தொழிற்கல்வியைக் கற்பிக்கும் பொறுப்பை ஆட்சியே ஏற்கவேண்டும். வாழ்க்கைக்குத் தேவையான கட்டாயப் பண்டங்களை உண்டாக்கும் கைத் தொழிற் பட்டடைகளையும், பொறியியற் பட்டடைகளையும், பள்ளியிலேயே அமைத்தும், வயல்களுக்கு மாணவர்களை அழைத்துச் சென்றும், தொழில் நுணுக்கங்களைக் கற்பிக்க வேண்டும். இதனால் ஆட்சிக்குச் செலவுமிகும் என்பதில் ஐயமில்லை. இன்று ஆட்சி தன் மொத்தச்செலவில் 20விழுக்காட்டைக் கல்விக்காகச் செலவிடுகிறது. இச் செலவு மேலும் பெருகுமென்பதற்காகப் பெற்றோரிடம் தொழிற் கல்வி கற்பிக்கும் பொறுப்பை விடுவது எதிர்பார்க்கும் நற்பயனைத் தராமற் போகும்; தொடக்கப் பள்ளிச் சிறுவர்களுக்குத் தொடக்கத்தில் இப்படி இருப்பது தவிர்க்க முடியாததே.

இனி, இத் தொழிற் கல்வி இடைத்தரப் பள்ளிகளிலிருந்து அதாவது ஆறாவது வகுப்பிலிருந்து பள்ளிகளில் தொடங்குதற்கும் வாய்ப்பமைந்தால் அமையட்டும். இது உயர்தரப் பள்ளிகளில் கட்டாயம் அமையவேண்டும். தொடக்கப் பள்ளி மாணவர்களின் வயதும் உடலும், உள்ள நிலையும், நுண்ணிய தொழிற்கல்வியைக் கற்க இயலாதவை. தொடக்கப் பள்ளி மாணவர்களில் தொழில் நிலை அமையாதவர்களுக்கு எழுத்துக் கல்விக்குப் பின் விளையாட்டுகளும் பாடல்களும் பள்ளியிலேயே கற்பிக்கப் படலாம்.

தாம் விரும்பும் தொழிற்கல்வியைக் கற்கும் உரிமை மாணவர்களுக்கு இருக்க வேண்டும். தம் பெற்றோர் செய்யும் தொழிலையே செய்ய வேண்டுமென்னுங் கட்டாயம் இருக்கக் கூடாது. அது தொழிலார்வத்தையும் புதுக் கண்டுபிடிப்புகளையும் தடை செய்யும்.

பொதுக் கல்வியின் கால அளவு பாதியாகக் குறைக்கப் பட்டதால், இன்றைய மாணவர்களின் தொகையை இரட்டிக்கலாம். இன்று பள்ளிக்கு வரும்

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

அருள் துறை

* நெஞ்சு விடு தூது *

(முத்துசாமி)

79. அலகிறந்த
காட்சியான் காட்சிக்குங் காணாக் கலைஞான
80. வாட்சியா னாட்சிக்கு மாயினான்—சூழ்சியான்
பாரும் திசையும் படரொளியா லேநிறைந்தான்
81. ஆருந் தலையுமிலாத் தோன்றலான்—வேராகி
வித்தாகி வித்தின் முளையாகி மேவுதனுச்
82. சத்தாகி பூதங்க டானாகிச்—சுத்த
வெறு வெளியாய்ப் பாழாய் வெறும்பாழுக் கப்பா
83. லுறுபொருளாய் நின்ற வொருவன்—பொறியிலியேன்
வெப்புப் பிறவியிலே வீழாமல் வீடளித்த
84. சம்பந்த மாமுனியென் றம்பிரான்—அம்புவியோர்
போற்றுந் திருவடியென் புன்றலைமீ தேபொறித்தோன்
85. வற்றின் புறத்தமைத்த வெங்கோமான்—சாற்றுவார்
சாற்றும் பொருளான் றனிமுதல்வன் னானல்லான்
86. வேற்றின்ப மில்லா விளங்கொளியான்—போற்றுங்
குருவேடமாகிக் குணங்குறியொன் றில்லாப்
87 பெருவேட மாய்நிறைந்த பெம்மான்—கருவேடங்
கட்டுமுருக் கட்டறுத்தான் கற்றவர்வாழ் தில்லையான்
எட்டுநவர்க் கெட்டா வியல்பினான்.

இறைவன் பெருமை: (79–83)

அளவில்லாத பற்பல விதமாகக் காட்சி கொடுப்பவன்; காட்சி கொடுக்கின்ற அந்த அளவே தன் அளவாக இல்லாதபடி மேலும் காண முடியாத காட்சியும் உடையவன்; கலை ஞானத்தால் இன்பங் கொடுத்து ஆள்பவன்; அக் கலை ஞானத்திற்கும் எட்டும்படியாக வருபவன்; இவ்வளவேயன்றி மேலும் ஆராய்தற்குரியவனாயு முள்ளவன்; உலகமும் எட்டுத்திசையும் படர்கின்ற ஒளியால் நிறைந்தவன்; அடியும் முடியுமில்லாத பெருமை வாய்ந்தவன். வேர் போல முக்கிய பாகமாகி, எல்லாம் தன்னுள் அடக்கிக் கொண்டு மீள ஒரு செடியைத் தோற்றுவிக்கும் வித்துப்போலவும் ஆகி, வித்தினின்று விளையும் விளைவு போலவும் ஆகி, உயிர்களுக்குப் பொருந்திவரும் உடம்பில் சத்தம் முதலிய தன்மாத்திரைகளாகி, சத்தி தத்துவமாகி, நாததத்துவமாகி, அந் நாததத்துவத்துக்கும் அப்பால் பொருந்திய பொருளாய் நிலைபெற்ற ஒருவன்.

யார் யார் எவ்வண்ணமாகப் பாவிக்கிறார்களோ அவ்வண்ணமாக இறைவன் காட்சிக்கு வருபவன் காட்சியென்பது கண்ணுக்குத் தெரியும் உருவம் மட்டுமன்று. அது அறிவுத் தெளிவுமாம். 'காட்சியான்' என்றது அறிவுத் தெளிவுக்கு ஏற்பவும் விளங்குபவன் என்னும் பொருளில். காட்டுகின்ற காட்சியளவு மட்டுமோ அவன் அளவு? இரக்கங் காரணமாகத் தன்னைச் சுருக்கிக் கொண்டு வந்து காட்டுகிறானேயன்றி அதுவே அவன் அளவல்ல. ஆகவே காண முடியாத இயல்பினும் உள்ளவன் என்க.

கடவுள் பரந்த, எங்கும் நிறைந்த, ஒரு நுட்பப் பொருள். அதனை விட நுட்பப் பொருள் வேறொன்றில்லை நுட்பத் தன்மையில் உள்ள அவனை அறியும் அளவுக்கு நாம் நுட்பமாய்ப் போனாலன்றோ அவனை அறிய முடியும்? அப்படி போகாமல் எனக்குக் கடவுள் காட்சியாகவில்லையே என்றால் எப்படி காட்சியாகும்? காட்சியாக வேண்டும் என்று அதிதீவிர ஆசை கொண்டு அதைக் குறித்தே ஏங்கி நின்றால் அவன் கருணை காரணமாக தகுதிக்கு ஏற்ப வந்து காட்சியாவான். அப்படி வந்த அவ்வடிவினையே அவனுடைய உண்மை இயல்பு என்று கூறிவிட முடியுமா?

சூழ்தல்—ஆராய்தல். ஆராய்ந்தறிவதற்குரிய பொருளாயிருப்பவன் பார்— பூமி. திசை—பூமி தவிர மற்ற எட்டுத் திசைப்பக்கமும். எங்கும் படர்கின்ற ஒளியாய் நிறைந்தவன். அந்த ஒளிக்குள்ளேதான் நாம் இருக்கிறோம். அவ்வொளி நம்முள்ளும் நிறைந்திருக்கிறது. இந்த எண்ணம் நமக்கு இருந்தால்,

எப்பொழுதும் கடவுள் திருமுன்னிலையிலேயே இருப்பதாகத் தோன்றும். அப்படி தோன்ற கடவுள் திருமுன்னிலையில் இருக்கும் நாம் இத்தகைய தவறுகள் செய்யலாமோ என்று தவறு புரியும்போது அச்சம் தோன்றும்.

வரம்புடைய பொருளுக்கு எல்லையுண்டு எல்லையென்பது ஒருபொருளின் மேற் கோடிப் பரப்பானபாகம். உருண்டையான பந்துக்கு அதன் மேற்பரப்பு எல்லை. நம் உடலுக்கு அதன் மேற்பாப்பான தோலுள்ள பாகம் எல்லை. எல்லைக்குள்ளேயே பொருள் இருக்கும். எல்லைக்கு வெளியே அப் பொருள் இருக்காது. அது போல கடவுளுக்கு எல்லை கூறமுடியுமா? கடவுளுக்கு எல்லை கூறினால் அந்த எல்லைக்கு அப்பால் கடவுள் இல்லையென்றல்லவோ ஆகும்! ஆகவே கடவுளுக்கு எல்லை இல்லையென்க. எல்லை இல்லையெனவே அடியும் முடியும் இல்லை. இதனையே 'தூரும் தலையும் இலாத் தோன்றலான்' என்றார்.

வேர் போல மூல ஆதாரமாக இருப்பவன் இறைவன். வித்துப் போல எல்லாவற்றையும் தன்னுள் அடக்கவும் வல்லவன் அடக்கியவைகளை மீளத்தோற்றவும் வல்லவன். நம் உடலில் தத்துவப் பொருளாகி வருபவன். தத்துவப் பொருளாய் வருவதென்பது அதனில் கலந்து நமக்குப்பயன் படவைத்தல் தத்துவப் பொருள்கள் தெரிய வேண்டுமாயின் அவற்றில் அவன் ஒளி, பட வேண்டும். அதாவது அவற்றிலும் அவன் கலக்கவேண்டும். இது, எதுபோலெனில் கண், காண்பதற்குக் காணும் பொருளில் சூரியன் ஒளி படவேண்டுவது போல வென்க. தத்துவங்களைக் கூறவந்தவர், தன்மாத்திரைகள் பின்னர் சக்தி, சிவம் என்னும் தத்துவங்களைச் சொல்லி பிறவற்றை உடன் பெறவைத்தார். சத்தியை வெளியென்று குறிப்பிட்டார். நாத தத்துவத்தைப் பாழ் என்று குறிப்பிட்டார். பிறர்க்கு அது ஒன்றுமில்லாத ஒரு பொருள் போல அதாவது பாழ்போலத் தோன்றுவதால் அதனைப் பாழ் என்றார். இறைவன் இப்பாழ் என்னும் நாதத்தைக் கடந்தவன்; அதாவது முப்பத்தாறு தத்துவங்களையுங் கடந்தவன்.

ஞானாசிரியன்: (83-87)

ஞானமில்லாத என்னைப் பிறவியென்னும் கொடிய அலையில் வீழாமல் விடுதலை யளித்த மறைஞான சம்பந்த மூர்த்தி என் தலைவன். உலகத்தார் போற்றும் திருவடியை என்னுடைய தலைமேலே பதியவைத்தோன். அவனே விடைப்பாகனாகிய என் இறைவன். சொல்பவர் சொல்கின்ற வகையாக வெல்லாம் இருப்பவன். தனக்கு ஒப்புக் கூறமுடியாதபடி தனித்த நிலையிலுள்ளவன். தன்னையல்லாது வேறு பொருளைச் சார்ந்து நிலையான இன்பந் தேடிக்கொள்ள முடியாதபடி தான் ஒருவனே நிலையான இன்பங்கொடுக்கும் இயல்பில் உள்ளவன். போற்றுகின்ற குரு வடிவமாகி வந்து குணம், பெயர், வடிவம், ஒன்றுமில்லாது நிறைந்த பெருமான். பிறவிக்கோலத்தில் கட்டும் உருவத்தைக் கட்டறுப்பவன். படித்தோர் வாழ் தில்லையான். அவனை எட்ட முயல்பவர்க்கு முழுதும் அகப்படாமல் எட்டாது நிற்கும் இயல்பில் உள்ளவன்.

இறைவனை இப் பகுதியில் உமாபதி சிவனார் தமக்கு ஞானாசிரியனாய் வந்தான் என்று கூறுகிறார். உமாபதி சிவனாருக்குக் குரு, மறைஞான சம்பந்தராவர். இறைவனே மறைஞான சம்பந்த மாமுனியாய் வந்து ஆட்கொண்டான் என்று கூறுகிறார். குருவாய் வந்து இவருடைய தலையில் அவருடைய திருவடியைப் பதியவைத்ததாகக் குறிப்பிடுகிறார். திருவடி யென்பது ஞானம். ஞானம் கொடுத்ததை அவ்வாறு கூறினார்.

குணம் குறியோடு குருவாய் வந்தாலும் அவன் தன் சொந்த இயல்பில் குணம் குறி ஒன்றும் இல்லாதவன். இறைவன் குரு வேடமாய் வருவதன் நோக்கம் நம் பிறவிக் கட்டை அறுத்து வீடளிப்பதே.

நஞ்சன்கூடு பல்பொடி
பாக்டெரியாரின்

யுனைடெட் கன்ஸர்ன்,
54; பந்தர்த் தெரு, :: சென்னை 1

மொழித் துறை

* ஈரடி இருநூறு *

நூலாசிரியர் – திரு. சே. கோதண்டபாணி பிள்ளை அவர்கள் B A.
(ஆசிரியர் அவர்களின் உரையுடன்)

உரைப்பாயிரம்

இரண்டடிகளாகிய குறட்பாக்களால் இயன்று அவை இருநூறு கொண்டதாகலின் இந்நூல் 'ஈரடி இருநூறு' எனப் பெயர் பெற்றது. இது, செய்யுளானும், அளவானும் பெற்ற பெயர். 'நாலடி நானூறு' ஐங்குறு நூறு' எனப் பிறரும் இவ்வாறு வழங்குப.

வாழ்க்கைக்கு உணர்வு, பொதுவாக இன்பவுணர்வு, பொருளுணர்வு, அறவுணர்வு என மூவகைப்படும். இவை இந்நூலில் கலையுணர்வு உலகுணர்வு மனவுணர்வு எனப்பட்டு ஒவ்வோரியலான் விளக்கப்படுகின்றன.

அறிவும், பொருளும் மனமுங் கருவியாக இவை மூவகைபாய் நிகழுமேனும் கருவிகளுள் மனம் என்பது இனங் காரணமாகப் பொருளொடு பொருந்தும் பழக்கத்தை நீங்கி அறிவொடு பொருந்தி உயர்தலே வாழ்க்கைக்குச் சிறப்பாதலின் மனத்தின் சார்புக்குரிய அறிவையும் பொருளையும் விளக்கிக் கொண்டு மேற் செல்லுதல் நூலின் உட்கருத்தாயிற்று. ஆகவே அவ்விரண்டையும் விளக்கும் இரண்டதிகாரங்களால் இந் நூற்றுக்குப் பாயிரம் இயல்வது இன்றியமையாததாயிற் றென்க.

தாய் மகவை நோக்கியும், மகவு தாயை நோக்கியும் வாழும் வாழ்க்கை முறையில் அருட் பண்பும் அன்புப் பண்பும் களிநடம் புரிகின்றன. அவ்வாறே தோற்றத்தில் அறிவு உலகை நோக்கியும் உலகு அறிவை நோக்கியும் ஈர்க்கப்படுவது போற்றோன்றுமாயினும், உண்மையில் அருளும் அன்பும் ஒன்றையொன்று ஈர்த்துக் கொண்டு ஒன்றுதும் இன்பத் திருநடமே வாழ்க்கை யென்பதுணரப்படும்.

'சக்தியின் வடிவேதென்னின் தடையிலா ஞான மாகும்' என்பவாகலானும், உயிரறிவு சிற்றறிவாதலின் அஃதொரு பொருளாகக் கருதப்பாடாததாகலானும், இறைவன் பேரறிவு வடிவாகிய இறைவியென்னுந் தாய்மையே ஈண்டு அறிவெனக் கருதப்பட்டது. எனவே, உலகை நோக்கி அருள் பொழியும் பேரறிவாற்றலாகிய தாய்மை ஓர் அதிகாரமாகவும் அத்தாய்மையை நோக்கி அன்பு பெருக்கும் 'உலகு' மற்றோரதிகார மாகவும் இப்பாயிரத்தின் கண் எடுத்துக் கொள்ளப்பட்டன வென்பது.

இதன் கருத்து, அருளும் அன்பும் இணைந்து தோன்றும் அமைந்த இன்பச் சிறப்பேயாகலின், அதனை இவ்வுலகு பெறுகவென முதற்கண் வாழ்த்தக் கருதுவார் அதனையொரு செய்யுளால் இந்நூலுக்கு வாழ்த்தாக ஆசிரியர் கூறுவாராயினர்.

பாயிரவியல்

1 வாழ்தது

அஃதாவது ஆசிரியர் தாம் இயற்றுகற்கு எடுத்துக் கொள்ளும் நூலின் முகப்பில் நலம் பயப்பதொரு கருத்தை வாழ்த்தாகக் கூறுதலாம். அது, உலகுக்கு முதற் பொருளை வாழ்த்துதலாகவாவது, அதற்கு வணக்கங் கூறுதலாகவாவது, நூலின் உட்பொருளாகிய நற் கருத்தை எடுத்துத் தருதலாகவாவது, இம்மூன்று மாகவாவது வரும். மூன்றுமாக வருங்கால் அவற்றுள் ஏதானும் ஒன்று சிறப்பிடம் பெற்று நன்கு விளக்கம் பெறுதல் இயல்பு. அவற்றுள் இது, நூலின் உட் பொருளை வடித்தெடுத்து வழங்கி அதன்கண் உலகு படிந்து நலனுறுக வென்னுங்கருத்தைச் சிறப்பாக விளக்கிக் கொண்டு மூன்றுமாக வந்த வாழ்த்தாம். 'அருள்க இறை' என்றதனால் முதற் பொருள் வாழ்த்தும் வணக்கமும் இறைவனடியைத் தலையும், அவையடக்க மமைந்தமையும், காண்க. அன்பென்றதனால் அதனைப் பெருக்கும் உலகமும் அமைதி என்றதனால் அதனைப் பொருந்தும் மனமும் இன்பம் என்றதனால் அதனை விளக்கும் கலையும் நூலின் உள்ளுறை மூன்றுமாயின.

அன்பைப் பெருக்க அமைதிதர
ஆருயிர்க்கு
இன்பம் அருள்க இறை.

(உ–ரை) இறைவன், அருமை வாய்ந்த உயிர்களுக்கு அன்பைப்

பெருக்கி அமைதி தந்து இன்பம் வழங்கியருள்க!

(வி - ம்) செயவெனெச்சங்கள், திரிபு. உயிர்கள் அறிவுடையன வாதலின், 'ஆருயிர்' என்றார். இன்பத்திற்கு அன்பும் அமைதியும் இன்றியமையாதன வாதலின், அவற்றைக் காரணமாக்கினர். இன்பமென்றது இருமைக்கும் பொருந்தும். இனி, இச் செய்யுட்கு அன்பை வளர்க்கவும், அதனால் உலகத்தில் அமைதியை உண்டாக்கவும் அரிய உயிர்கட்கு இறைவன் இன்பந்தரும் நலங்களை வழங்கியருள்க என்று உரைத்தலும் ஒன்று. இப்பொருட்கு, இன்ப வாழ்க்கை நிகழுமாயின், உலகில் அன்பும் அமைதியும் மிகும் என்பது கருத்தாம்.

PHONE 55034 TEL. ENKAYAM
கைத்தறி ஆடைகளில்
சிறந்தது எங்கள்
கிசான் டிரேட்மார்க்

பட்டாடைகளுக்கும்
நூலாடைகளுக்கும்
சிறந்த இடம்
கருப்பணமுதலியார்ஸ்டோர்ஸ்
53, கிடங்குதெரு சென்னை 1.

கலைத் துறை

காயைக் கவராது கனியைக் கவர்ந்தாள்

நேரிசை வெண்பா.

காயைக் கவரார், கனியில் கவர்ந்திடுவார்;
சேயன் குமரன் தெரிந்ததனைக்—காயுட்
பழமானுன்; பைம்புனத்துப் பான்மொழியாள் வள்ளி
விழைந்தனளீ தென்ன வியப்பு!

பறவைகளும் கனியை விழைகின்றன; மக்களும் கனியை விழைகின்றனர்; ஞானிகள் பேரின்பமாகிய பழத்தை விரும்புகின்றனர். வள்ளியம்மையும் பரமனால் 'பழம் நீ' என்று விளிக்கப்பட்ட முருகனை விரும்பினாள். இதில் வியப்பில்லை.

சில, காயில் ஒரு சுவையும் கனியில் வேறொரு சுவையும் பொருந்தியுள்ளன. வாழை, காயில் துவர்க்கும், கனியில் இனிக்கும்; வேம்பு காயில் கசக்கும், கனியில் சற்று இனிக்கும். மற்றுஞ் சிலவற்றுள் காயில் உள்ள சுவையே கனியில் மிகுதிப்பட்டிருக்கும். புளி, காயில் புளிக்கும், கனியில் புளிப்பு மிகுதிப்பட்டிருக்கும். மா, காயில் பல விதச் சுவைகளோடிருக்கும், கனியில் யாவும் இனிப்பாகவே இருக்கும். காயில் துவர்ப்பு, புளிப்பு, கசப்புச் சுவை யுள்ளதுங் கூட கனியில் இனிப்பாக மாறி உண்கின்ற உயிர்களுக்கு இன்பமளிக்கிறது. இதனால் மக்கள் கனியையே விழைகின்றனர். பறவைகளில், காகம் வேம்பையும், கிளி கொவ்வையையும் கனியிலன்றோ விரும்பி யுண்கின்றன. இவ்வுண்மையை நம் பொய்யாமொழியார் காயை இன்னாசொல்லாகவும், பலரும் விரும்புங் கனியை இன்சொல்லாகவும் 'இனியவைகூறல்' என்னும் அதிகாரத்துள் வைத்துக் காட்டுகின்றார்.

பழம் உண்பதற்குப் பேரின்பமாயிருக்கிறது. காய் பழத்தைப் போன்று இன்பந் தருவதில்லை. எனவே, இறைவனடி சார்ந்தார் துய்க்கும் இடையறாத இன்பத்தைப் பேரின்பமென்றும், பழமென்றும், மாயையுள் மயங்கி மக்களிடை யுழன்று இடர்ப்படும் சிற்றின்பத்தைக் காயென்றும் முற்றுமுணர்ந்த ஞானிகள் கூறியுள்ளனர். இதையே தாயுமான அடிகளும் வேம்புங் கனியில் இனிக்குமாதலின் அதைக் கூறாது, உண்பார் உடனே வெறுக்கும் வேப்பின் காயைப் போன்று வெறுப்பூட்டுந் தன்மையது சிற்றின்பம் எனக்

கண்டு "கன்னிகை பொருத்தி சிற்றின்பம் வேம் பென்னினுங் கைக். கொள்வள் பக்குவத்தில்" என்று கசக்கும் காய்க்குச் சிற்றின்பத்தை உவமைக்காட்டிக் கூறியுள்ளார் எனினும், மக்கள் இன்பமாகக் கருதுவது துன்பத்தையே. இந்த உண்மையைப் பகழிக்கூத்தர் "பசையிலாத வெற்றென்பினைக் கடித்தலகு புண்ணுயக் குருதி விழுமதைப் பருகு நாய் போல் சொல்லொத்த உலகுறு தன் பெலாஞ் சுகமாய்த் திடிப்பர்" என்ற உவமை வாயிலாக எடுத்துக் காட்டுகின்றார். [நாய் பசையற்ற எலும்பினைக் கடிக்கும் பொழுது அவ் வெலும்பினால் கிழிபட்டு வாயிலிருந்து வரும் குருதியை யுண்டு மகிழ்கின்றது.]

சிவமும் சத்தியும் தனித்து நின்றால் உலகும், அதிலுள்ள உயிர்களும் ஒடுங்கி நிற்கும். சத்தியுஞ் சிவமுமாய்க் காட்சியளிக்கும் பொழுது உலகுயிரியங்கும். 'சத்தியுஞ்சிவமுமாவார் தனிப்பயற்றாரணுரே' என்ற செய்யுளால் அப்பர் தானறிந்த சிவ சத்தி வடிவத்தி னுண்மையைக் கூறியிருக்கின்றார்.

மக்கள் தாங்கள் அறியாமையால் நடந்து கொள்வதே போல் இறைவனும் நடக்கின்றானென்று எண்ணுவது பேதைமையாகும். இறைவன் உயிர்களிடங் கொண்ட கருணையினால் காத்தும், படைத்தும், காந்தும் விளையாடுகின்றது போல் காட்டுகின்றான். ஆயினும் அவன் அவ்வாடலில் ஈடுபடவில்லை. அது "கலைப்படு மதியப் புத்தேள் கலங்கலம் புனலிற்றோன்றி அலைப்படு வதுமா தன்றோ அறுமுகனுடை லெல்லாம்" என்று கச்சியப்ப சிவாசாரியார் கூறியதைக் கொண்டு அறியலாம். கலங்குகின்ற நீரில் மதியின் எதிர்த்தோற்றம் (பிரதி பிம்பம்) ஆடுவது போலிருந்தாலும் மதியாடாதவாறுபோல் அறுவகைக் குற்றமுங் கடிந்த அறுமுகனுக்குச் சலனமென்பதில்லை.

முருகன் அன்று, காமம் முதலிய அறுவகைக் குற்றத்தையுங் கடிந்தவன் என்பதைக் காட்டுவதற்கே பழுத்த கிழ வேடந் தாங்கினான்; ஞானிகள் நின்ற உருவில் தோன்றினான்; பழுத்த கிழத்தை வள்ளியுங் கண்டாள். மன்பதைக் கூட்டத்துள் மயங்கிய வள்ளைதலின் ஆணவ மலத்திரை வள்ளியையும் மறைத்தது (ஆவரணம்). சற்றுத் திகைத்தாள் அவளை ஆட்கொள்ள வந்த வள்ளல் ஓங்கார வடிவத்தை வருவித்தான். வள்ளி ஓங்காரத்துள்ளொளிக் குள்ளே முருகனுருவங் கண்டாள். கண்டவள் தன்னையறிந்து பிஞ்சிற் பழுத்தவனும், ஞானப் பழமாயிருப்பவனும், பழுத்த கிழம் போல் வந்தவனும் முருகனே என்றுணர்ந்தாள். அப்பழத்தை விழைந்து கொண்டாள்.

—வே. சா. ஏகாம்பரம்.

Telegrams: "RAMBROS"

N. RamuBros;

GENERAL HARDWARE

MERCHANTS

AVANASHI ROAD,

COIMBATORE.

திருமுறைக் கண்காட்சி

கருத்துக்களை மக்களிடம் பரவச் செய்வதற்குப் பேச்சும் எழுத்தும் எவ்வாறு தேவைப்படுகின்றனவோ அவ்வாறே கண்காட்சிகளும் இன்றியமையாதனவாய் உள்ளன. பேச்சாலும் எழுத்தாலும் உண்டாக்க முடியாத உணர்ச்சிகளையும் தெளிவினையும் கண்காட்சிகளால் உண்டாக்கலாம்.

நம் நாட்டுப் பண்டங்களையே நாம் வாங்க வேண்டுமென்னும் கருத்தைப் பரவவைத்தற்கும், அக்கருத்தை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கும் அவ்வியக்கத்தார் நடத்திய கண்காட்சிகள், அவர்களின் பேச்சு எழுத்துக்களை விடப் பெரிது பயன்பட்டன. சிற்பக் கண்காட்சி, ஓவியக் கண்காட்சி, பொறியியற் கண்காட்சி படைக் கண்காட்சி, கைத்தறிக் கண்காட்சி, முதலியவற்றால் மக்களுக்கு உண்டாகும் அறிவு விளக்கமும், புத்துணர்ச்சிகளும் செயற்படும் எண்ணங்களும் அளவிடற் பாலன வல்ல. கண்காட்சிகள் மக்களை முக்காலங்களுக்கும் கொண்டு செல்லும் ஆற்றலுடையவை. ஒரு சிறிய இடத்தில் அவ்வத்துறையைச் சேர்ந்த உலகத்தையே காட்டவல்லவை.

இலக்கியங்களைப் பரவச் செய்வதற்கும் கண்காட்சிகள் உதவுகின்றன. கம்பராமாயணக் கண்காட்சி இதற்கு எடுத்துக் காட்டு.

சைவவுலகில், திருமுறைகள் நன்கு பரவச் செய்யப்படாமை

யாலும், தக்க முறையில் அனைவராலும் போற்றப்படாமையாலும் பல குறைபாடுகள் தோன்றியுள்ளன.

இவ்வருள் நூல்களின் சிறப்பைத் தெரிவிக்கும் பொருட்டும், அவற்றைக் கற்று ஓதவேண்டியதன் இன்றியமையாமையை விளக்கும் பொருட்டும், அனைவரும் அவற்றின் பயனைக் கொள்ளும்படி பாவச் செய்யும் பொருட்டும், திருக்கழுக்குன்றத்தில் திருமுறைப் பெருவிழா ஆண்டுதோறும் நடைபெறுகிறது. அங்கு நடைபெறும் திருமுறைப் பேரவைகளில் அவற்றின் பெருமைகளும் கருத்துக்களும் தக்கோரால் விளக்கப் படுகின்றன. அவை வழிபடத் தக்க அருள் நூல்களென்பதனைப் பொது மக்களுக்குக் காட்ட, யானைமேல் ஏற்றப்பட்டுச் சிறப்புச் செய்யப் படுகின்றன. இவற்றோடு திருக்கழுக்குன்றத்தில் திருமுறைக் கண்காட்சி ஒன்று அமைவது பல காரணங்களால் பொருத்தமும் இன்றியமையாமையும் உடையது.

இக் கண்காட்சியில் திருமுறையேட்டுச் சுவடிகளும், எல்லாப் பதிப்புகளும், பிறமொழியாளர் செய்துள்ள மொழிபெயர்ப்புகளும் இருக்க வேண்டும். திருமுறைகளின் ஆசிரியர்கள், அவை போற்றும் அடியார்கள், அவற்றோடு தொடர்புடைய மன்னர்கள் முதலாயினோரின் வரலாற்று நூல்கள் அங்கு இருக்க வேண்டும். திருமுறைகளைத் தழுவி எழுதிய சிவப்பிரகாசர், இராமலிங்க அடிகள் முதலிய பெரியோர்களின் அருள் நூற்பகுதிகளும், அவர்களின் வரலாறுகளும் அங்கு இடம்பெற வேண்டும்.

தென்னாடு கோவில்நாடு. திருமுறையாசிரியர்கள் கோவில்களையே சுழலாணி (Pivot) யாகக் கொண்டு உலகப் பணிகளை இறைபணியெனச் செய்தனர் அவர்கள் கண்டு வழிபட்ட கோவில்களின் நிழலுருக்கள் யாவும் அங்கு இருக்கவேண்டும். அக் கோவில்களில் காக்கப்படும் கலைச் செல்வங்களின் படங்கள், கல்வெட்டுகளின் படிவங்கள் அங்கே காட்டப்பட வேண்டும். திருமுறையாசிரியர்களின் படங்களும், திருமுறைகளில் குறிப்பிடப்பட்ட பெருமக்களின் படங்களும் இருக்க வேண்டும். அன்றியும் திருமுறை ஆசிரியர்கள் அருளிய இயற்கைப் புனைவு (வர்ணனை) களைக் கொண்டு தீட்டக்கூடிய ஓவியங்களும், மணிவாக்குகளும் திருமுறைகளுக்குத் தொடர்புடைய சிற்பங்களும் அங்குக் காணப்படவேண்டும்.

திருமுறை ஆசிரியர்கள் வாழ்ந்த ஊர்கள், இல்லங்கள், அவர்கள் சென்று தொழுத இடங்கள், அவர்கள் சென்ற பாதைகள் முதலிய குறிப்புகளைக் கொண்ட நாட்டுப் படங்களும் அங்குச் சேர்க்கப் படவேண்டும்.

திருமுறைக் காலங்களைப்பற்றிய நூல்களும், அவ்வக் காலத்து மக்களை பற்றிய நூல்களும், திருமுறைகளை அவர்கள் போற்றிப் பயன் படுத்திக் கொண்ட முறைகள், திருமுறைகளின் தொடர்புடைய கல்வெட்டுகளின் கருத்துக்கள் திருமுறை இசைகள், இசையாராய்ச்சிகள், அவற்றிற்குரிய கருவிகள் பற்றிய நூல்களும் அங்குத் தொகுக்கப்படவேண்டும்.

தனித்தனியே சொல்லுவானேன்? மனிதனால் திருமுறைகளை உலகுக்குக் காட்சிப் பொருள்களாக்கக் கூடியவற்றையெல்லாம் அங்குத் தொகுத்துக் காட்ட வேண்டும். இதனால் மக்களுக்குத் திருமுறைக் கருத்துக்களும், உயர்வும் விளங்கிப் பதிந்து பெரும் பயன் உண்டாகும்.

இக் கண்காட்சியை முழு அளவுக்குக் கொண்டுவரப் பல்லாயிரத் தொண்டர்களின் பல ஆண்டு உழைப்புத் தேவை. எனினும், திருக்கழுக்குன்றத் திருமுறை இன்னிசைப் பெருவிழாவில் அண்மையிலேயே, சிறிய அளவில் தொடங்கிவிட வேண்டும் பிறகு சிறிது சிறிதாக வளர்க்க முயல வேண்டும்.

—கு. இரா. மெ.

(2-ம் பக்கம் தொடர்ச்சி)

மாணவர்களின் தொகை 40 நூறாயிரம் இது மாகாணத்துச் சிறுவர்களின் மொத்த எண்ணிக்கை (80 நூறாயிரம்) யில் பாதி. எனவே, இவ்வாய்ப்பைப் பயன் படுத்திக்கொண்டு அனைவர்க்கும், வலியுறுத்தியேனும் எழுத்தறிவைத் தர வேண்டும்.

இப்புதுக் கல்வி முறையை மேற்கூறிய திருத்தங்களோடு செயற்படுத்தினால் நாட்டுக்கு நல்ல பயன் உண்டாகும் எதிர்ப்புகளும் குறைந்துபோம்.

—மெய்கண்டான்

—:○●○:—

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர்; தி. சு. பாலசுந்தரம், குருகுல அச்சகம், மாமபாக்கம்; மதுராந்தகம் (அஞ்)